**நில அளவை சபை - 2023**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

நில அளவை சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும், 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் மற்றும் 2002 இன் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கவுன்சிலை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கவுன்சிலின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவணையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும்

பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கவுன்சில் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2016 இன் 12 ஆம் இலக்க தகவல்கள் சட்டத்தின் பிரிவு 25(1) | தகவல் உத்தியோகத்தர் ஒருவரினால் கூடிய விரைவில் மற்றும் கோரிக்கை கிடைத்து பதின்நான்கு நாட்களுக்குள் குறிப்பிட்ட தீர்மானம், கோரிக்கை விடுக்கப்பட்ட பிரஜைக்கு உடனடியாக தொடர்பு கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் 2023 ஆண்டில் கிடைத்திருந்த 23 தகவல் கோரிக்கைகளில் 09 இற்கு பதிலளித்திருக்காததுடன் பதில் அளித்திருந்த 14 கோரிக்கைளில் 12 இற்காக பதின்நான்கு நாட்களை மிகைத்து 01 நாள் முதல் 165 | 09 தகவல் கோரிக்கைகளுக்கு பதில் அளிக்கப்பட்டு தகவல்கள் கிடைக்கப்பட்டது என அறிவிக்கப்பட்டது. தகவல் வழங்கும் போது நில அளவை கவுன்சிலின் அபிப்பிராயம் வினவக் கூடிய முறையில் தகவல்கள் கோரப்பட்டு இருந்தமையால் நில அளவை கவுன்சிலின் அபிப்பிராயத்தை வினவுவதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அது கிடைத்தவுடன் தகவல்களை வழங்குவதற்கு இயலுமை ஒன்று காணப்படின் தகவல்கள் வழங்குவதற்கும், | கோரிக்கையெயான்று கிடைத்து பதின்நான்கு நாட்களுக்குள் குறிப்பிட்ட தீர்மானம் கோரப்பட்ட பிரஜைக்கு உடனடியாக தொடர்பாடல் செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நாட்களுக்கான காலவீச்சொன்றிற்கான காலதாமதம் ஒன்று ஏற்பட்டிருந்தது. | மறுப்பதற்கு நேரிட்டால் அது பற்றியும் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.<br><br>தகவல்கள் வழங்கிய 14 கோரிக்கைகளில் 2 இற்காக நேரடியாக தகவல்கள் வழங்குவதற்க இயலுமாக இருந்தமையால் அதற்கு பதில் அனுப்பப்பட்டது. மீதியான 12 கவுன்சிலின் அபிப்பிராயத்தை வினவி அனுமதி கிடைத்த பின்னர் பதில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எதிர்காலத்தில் 14 நாட்களுக்குள் பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கருணையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (ஆ) 2002 இன் ஒப்தோபர் 04 ஆம் திகதிய 2002 இன் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்டம் | | | |
| i. பிரிவு 32(1) | கவுன்சிலினால் நியமனம் செய்யப்படும் செயலாளர் ஒருவர் காணப்ட வேண்டியிருந்த போதிலும் 2002 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை செயலாளர் ஒருவர் நியமனம் செய்திருக்கவில்லை. | செயலாளர் ஒருவர் நியமனம் செய்வதற்காக பத்திரிகைகளில் மற்றும் வர்த்தமானி அறிவித்தலுக்காக கிடைத்திருந்த 19 விண்ணப்பங்களில் நேர்முகப் பரீட்சைக்கு இரண்டு பேர் மாத்திரம் சமுகமளித்திருந்தனர். அவர்கள் அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்திருக்காமையால் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br><br>இது தொடர்பாக முகாமைத்துவ சேவைத் திணைக்கத்துடன் கலந்துரையாடி ஆட்சேர்ப்பு தகைமைகள் காணப்பகின்ற ‘‘பொதுத்துறையில் ஒரு வருட செய்முறைசார் அனுபவம் அல்லது தனியார் துறையில் ஒரு வருட அனுபவம்’’ என குறிப்பிட்ட தகைமைகள் திருத்தப்பட்டு உட்படுத்தி | செயலாளர் ஒருவர் தாமதமின்றி நியமனம் செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஆட்சேர்ப்பு நடைமுறையை மீண்டும் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| ii. | பிரிவு 38(எ) | கவுன்சிலின் அலுவல்களை நிருவாகித்தல் தொடர்பாக விதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கவுன்சிலின் பதிவு மற்றும் வருடாந்த நில அளவை அனுமதிப்பத்திரம் வழங்குதல் ஆகிய விடயங்கள் தொடர்பான விதிகள் தற்போது சட்டவரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு அதன் முதலாவது திருத்தம் மற்றும் அவதானிப்புக்கள் கிடைக்கப் பெற்றுள்ளது. அதன் அவதானிப்புக்கள் மற்றும் திருத்தங்கள் மீண்டும் தயாரிக்கப்பட்டு பூர்த்தியாக்கப்பட்டுள்ளதுடன் இறுதியாக அது சட்டவரைஞர் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் படி குறிப்பிட்ட அங்கீகாரம் கிடைத்தவுடன் சபையின் முக்கிய செய்பணியான பதிவு செய்தல் மற்றும் வருடாந்த நில அளவை அனுமதிப்பத்திரம் தொடர்பாக விதிகள் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிருவாகம் தொடர்பாக விதிகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| iii. | பிரிவு 46(2)(1) | கவுன்சிலுக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற நில அளவையாளர்களின் தொழில்சார் துர்நடத்தைகள் தொடர்பாக முறைப்பாடுகளை விசாரணை செய்தல் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் 2023 ஆண்டிற்கு முன்னர் கிடைத்திருந்த 134 முறைப்பாடுகள் மற்றும் 2023 ஆண்டில் கிடைத்திருந்த 78 முறைப்பாடுகள் உட்பட 212 முறைப்பாடுகளில் 149 முறைப்பாடுகள் மீளாய்வாண்டு இறுதியளவிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | முறைப்பாடுகளை விசாரணை செய்யும் போது முறைப்பாடு தொடர்பாக எதிர்வாதி தரப்பினருக்கு கூற்றுக்கள் வெளியிடுவதற்கு, போதியளவு காலம் வழங்குவதும், (28 நாட்களுக்கான காலம்) உப குழுவினால் முறைப்பாடு மற்றும் அது தொடர்பான எழுத்துமூல சான்றுகள் சிறந்த முறையில் விசாரணை செய்து தரப்பினரை அழைப்பதற்கும் ஒரு மாதத்திற்கு ஒரு முறை அல்லது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு இரண்டு முறை முறைப்பாடுகள் விசாரிக்கப்படுவதுடன் முறைப்பாட்டுத் தரப்பினர் | கவுன்சிலுக்கு கிடைக்கப் பெறும் முறைப்பாடுகள் தாமதமின்றி தீர்க்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அல்லது எதிர்வாதித் தரப்பினர் நியாயமான காரணங்களை காட்டி சமுகமளிக்காத சந்தர்ப்பங்களில் கவுன்சில் தீர்மானித்து தொடர்ந்தும் சந்தர்ப்பம் வழங்கள் மேற்கொள்ளல் ஆகிய முக்கிய விடயங்கள் மற்றும் ஏனைய மறை விடயங்கள் காரணமாக முறைப்பாடுகளை தீர்த்தல் தொடர்பாக செயலாற்றுகை சுட்டியொன்று தீர்மானிக்க முடியாது.<br><br>மேலும் கொரோனா தொற்றுநோய் காலத்தில் காணப்பட்ட முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு முடியாமல் போனதால் தற்போதும் அந்த முறைப்பாட்டு கோப்புக்கள் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டிக் காணப்பட்டது.<br><br>மேற்கூறிய விடயங்களுக்கு மேலதிகமாக கவுன்சிலின் நிதி நிலைமையின் படி முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு கூடிய தவணை எண்ணிக்கைகள் மேற்கொள்வதற்கு கவுன்சில் கவனம் செலுத்தி வருகின்றது. | |
| iv. | நில அளவைச் சட்டத்தின் பிரிவு 47(1)(ஈ) | வருடாந்த நில அளவை அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தப்பட்டுள்ளது என 2023 செப்தெம்பர் 27 ஆந் திகதி 2352 ஆம் இலக்கங் கொண்ட வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்த பெயர் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள 13 பேர்களில் ஒரு நில அளவையாளர் தொடர்பாக மாத்திரம் வருடாந்த அறிக்கையில் உட்படுத்தப்பட்டிருந்தது. | 2023 செப்தெம்பர் 27 ஆந் திகதி 2352 ஆம் இலக்கங் கொண்ட வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்த பெயர் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள 13 பெயர்களின் வருடாந்த பயிற்சி அனுமதிப்பத்திரம் இடை நிறுத்தப்பட்டுள்ள நில அளவையாளர்களின் பெயர் பட்டியலாக காணப்பட்டதுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் உட்படுத்தப்பட்டிருந்த பெயர்களில் குறிப்பிடப்பட்டுள்ளது அதிகாரமளிக்கப்பட்ட நில அளவையாளர்களின் தொழில்சார் மற்றும் ஏனைய துர்நடவடிக்கைகள் | வருடாந்த நில அளவை அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தப் பட்டுள்ள நில அளவையாளர் களின் பெயர்கள் வருடாந்த அறிக்கையில் உட்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தொடர்பாக தண்டம் விதிக்கப்பட்ட பெயர் பட்டியல் ஒன்றாகும்.<br><br>அங்கு டீ.பீ.எஸ். சங்கரதெனிய அவர்களால் அந்த இரண்டு பெயர்பட்டியல்களின் கீழும் தண்டனை வழங்கப்பட்டுள்ளமையால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இந்த தகவல்களுக்காக இரண்டு விடயங்கள் அடிப்படையாகக் காணப்பட்டது என குறிப்பிடுகின்றேன்.<br><br>இதன் காரணமாக தவறுதலாக வருடாந்த பயிற்சி அனுமதிப் பத்திரம் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலஅளவையாளர்களின் பெயர் பட்டியல் தொடர்பான அங்கீகாரம் கிடைக்கப் பெற்ற கூட்ட அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்படவில்லை. எதிர்காலத்தில் அவ்வாறான வழுக்கள் ஏற்படாமல் இருப்பதற்காக அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. | |
| v. பிரிவு 47(3) | நிலஅளவையாளர் ஒருவர் தொழில்சார் துர்நடத்தை ஒன்றில் குற்றவாளியான சந்தர்ப்பத்தில், செலுத்த வேண்டிய அனைத்து கட்டணங்கள் மற்றும் செலவுகள் கவுன்சிலுக்கு அறவிடப்பட வேண்டிய கடனொன்றென கவுன்சிலினால் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் வருடாந்த அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தப்பட்டிருந்த நிலஅளவையாளர்களின் பெயர் வர்த்தமானியில் வெளியிடுவதற்காக கவுன்சிலினால் செலவிடப்பட்ட தொகை குறிப்பிட்ட நில அளவையாளர்களிடம் அறவீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இரண்டு நிலஅளவையாளர்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்த தொழில்சார் துர்நடத்தைகளுக்காக முறையான விசாரணையின் படி 2023 மார்ச் 16 திகதி முதல் 2026 மார்ச் 15 திகதி வரை அவர்களின் பதிவு இரத்துச் செய்யப்பட்டிருந்தது. (வருடாந்த அனுமதிப்பத்திரமும் இரத்தாகின்றது) பதிவு இரத்து செய்தல் தொடர்பாக அவரது பெயர் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக கவுன்சிலினால் மேற்கொள்ளப்படும் செலவுகளும் அவரிடம் அறவீடு செய்தல், அவருக்கு வழங்கப்படும் தண்டனை இரண்டாக காணப்பட்டமையால் அதனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை | அனுமதிப் பத்திரம் இடைநிறுத்தப் பட்டுள்ள நிலஅளவையாளர்களின் பெயர் வர்த்தமானியில் வெளியிடுவதற்காக கவுன்சிலினால் செலவிடப்பட்ட தொகை அறவிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | எடுக்கப்படவில்லை. கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டிருந்தவாறு செயற்படுவதற்காக திருத்தமொன்று மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. (தண்டம்+வர்த்தமானிக் கட்டணம்) அடைப்புக்குள் காட்டப்பட்டுள்ளவாறு செயற்படுவதற்காக குறிப்பிட்ட திருத்தங்கள் மேற்கொள்வதற்கு கவுன்சிலுக்கு சமர்ப்பிக்கப்பட்டு குறிப்பிட்ட திருத்தங்கள் தொடர்பாக அபிப்பிராயத்தை வினவுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 3,130,667 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 367,510 தொகையாக இருந்தது. அதன் படி நிதிக் கூற்றுக்களில் ரூபா 2,763,157 இற்கான முன்னேற்றம் ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு நிலஅளவையாளர்களிடம் அறவிடப்படும் அனுமதிப்பத்திரங்கள் மற்றும் பதிவு செய்தல் கட்டணம் அதிகரிக்கப்பட்டதனால் அந்த வருமானம் ரூபா 1,834,600 தொகையினால் உயர்வடைதல், நிலையான வைப்புக்கள் அனேகமானவை முதிர்வடைந்ததனால் நிலையான வைப்புக்களுக்கான வட்டி வருமானம் ரூபா 1,796,262 இனால் அதிகரித்தலும் மற்றும் 2023 ஆண்டின் செயலமர்வுகள் நடாத்திய காரணத்தினால் செயலமர்வுகளின் தேறிய வருமானமும் ரூபா 528,200 இனால் அதிகரித்தலும் பிரதானமான காரணமாக இருந்தது.

**2.2 விகிதாசாரப் பகுப்பாய்வு**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதி நிலைமைக் கூற்றின் படி நிறுவனத்தின் நடைமுறை சொத்துக்கள் விகிதாசாரம் 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது முறையே 2.19 :1 தொகை மற்றும் 2.66:1 தொகையும் திடீர் சொத்துக்கள் விகிதாசாரம் 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது முறையே 2.15:1 மற்றும் 2.62:1 தொகையும் ஆகக் காணப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பதிவு இலக்கம் - 19780876 கொண்ட நிலஅளவையாளர் தொழில்சார் துர்நடத்தை ஒன்றின் மீது 2021 ஜனவரி 01 முதல் 2021 திசெம்பர் 31 திகதி வரை வருடாந்த அனுமதிப்பத்திரம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த போதிலும், அனைத்து நிலஅளவைகள் தொடர்பான | 2022 ஆண்டிற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்காததுடன் 2023 ஆண்டிற்கான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக 2021 ஆண்டில் நிலவரைபடங்கள் வழங்கும் பதிவேட்டை பரிசோதனை செய்துபார்த்து 2023 ஆண்டிற்காக அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | வருடாந்த அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தப்பட்ட நிலஅளவையாளர் தொடர்பாக அனைத்து நிலஅளவை தொடர்பான அலுவலகங்களுக்கும் அறிவிக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| அலுவலகங்களுக்கு அறிவித்திருக்காமையால் அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தப்பட்டிருந்த காலப் பகுதியில் நிலஅளவை செய்து 31 நிலஅளவைப் படங்கள் வழங்கியிருந்தது. இதற்காக வேறேதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளாமல் மீண்டும் ஒருமுறை 2023 ஆண்டிற்காக வருடாந்த அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான வழுக்கள் ஏற்படாமல் இருப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரி செயலாளரின் இலக்கம் 01/2021 மற்றும் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் PED/01/2021 கொண்ட அரச தொழில்முயற்சிகள் மீதான சுற்றறிக்கையின் அரச தொழில் முயற்சிகளில் நல்லாளுகைக்காக வெளியிடப்பட்டிருந்த கைநூலின் 6.6 பந்திக்கு இணங்க நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைபு வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் கணக்காய்வாளர் அதிபதிக்கு பிரதிகளுடன் வரிசை அமைச்சுக்கு மற்றும் திறைசேரியின் அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கவுன்சில் 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2024 ஜூன் 03 திகதியன்றே சமர்ப்பித்திருந்தது. | 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்குகள் 2024 பெப்ரவரி 28 திகதி கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கண்டறியப்பட்ட குறைபாடுகளை சரிசெய்து 2024 ஜூன் 03 திகதி மீண்டும் அக் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டது. எதிர்காலத்தில் அவ்வாறான குறைபாடுகளை தவிர்ந்து கொள்வதற்காக நடவடிக்கை எடுப்பேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |